# வேளாமீனின் (SAWFISH) அலகு மாட்டிக்கொள்வதை விடுவித்தல் செயல்பாடு

**கற்றலின் நோக்கம்**

வேளாமீன்கள் எப்படி எளிதாக மீன் வலைகளில் மாட்டிக்கொள்கிறது என்பதைக் காட்சிபடுத்துதல்.

**பின்னணி**

மீன்பிடித்தலால் உலகம் முழுவதும் வேளாமீன் இனம் மிக அதிகமாக குறைகிறது. இதற்குக் காரணம் இரம்பம் போன்று நீட்டிக்கொண்டிருக்கும் அதன் அலகு தான். மீன்பிடி வலைகள், பொழுதுபோக்கிக்கான மீன்பிடி தூண்டில்கள், தூக்கி எறியப்பட்ட மீன்பிடி கருவிகள், தூக்கி எறியப்பட்ட பிற கழிவு போன்றவற்றில் வேளாமீன்கள் மிக எளிதாக மாட்டிக்கொள்கிறது. இந்த விளையாட்டில், விளையாடுபவர்கள் வேளாமீனின் ரம்பத்தைத் தங்கள் விரல்களில் அணிந்துகொண்டு மீனைப் பிடிக்க வேண்டும், அதேவேளையில் மீன் வலையில் மாட்டிக்கொள்ளாமல் தப்பிக்க வேண்டும். வலையில் மாட்டிக்கொள்ளாமல் முடிந்தளவுக்கு மீன்களைப் பிடிக்க வேண்டும் என்பது தான் நோக்கம்.

**தேவையான பொருட்கள்**

- ‘கடல்’ போன்ற அமைப்புக்கான கொள்கலன் (ஒரு கூடை அல்லது பெட்டி)
- இழை/ நூல் இழை
- ஐஸ்குச்சிகள் (ஒரு ரம்பத்திற்கு 2)
- பல்குத்தும் குச்சிகள் (ஒரு ரம்பத்திற்கு 3 முதல் 7)
- சிறிய பொம்மை மீன்
- வேகமாக காய்ந்துவிடும் பசை
- கத்தரிக்கோல்
- ரப்பர் பேண்டுகள் (ஒரு ரம்பத்திற்கு 2)




# வேளாமீனின் (SAWFISH) அலகு மாட்டிக்கொள்வதை விடுவித்தல் செயல்பாடு


**செய்முறை**

1. வேளாமீன் ரம்பம் செய்ய உங்களிடம் இரண்டு ஐஸ்குச்சிகள், பல்குத்தும் குச்சிகள், பசை போன்றவை இருக்க வேண்டும். தேவைப்பட்டால், இரண்டு ஐஸ்குச்சிகளின் நீளத்தைக் குறைக்க தேவையான அளவு வெட்டலாம். சராசரி நீளம் விளையாடுபவரின் விரல்களை விட சற்று அதிகமாக இருக்கும். விருப்பரீதியானது: உங்களிடம் வெவ்வேறு வயது பிரிவினர் இருந்தால், வெவ்வேறு நீளங்களில் இரண்டு ரம்பங்களை உருவாக்கலாம்.

2. ஒரு ஐஸ்குச்சியில் சீரான இடைவெளியில் 3 முதல் 7 பல்குத்தும் குச்சிகளை குறுக்காக வைக்கவும். அதிகமான பல்குத்தும் குச்சிகளை நீங்கள் பயன்படுத்தினால் மாட்டிக்கொள்ளாமல் இரையைப் பிடிப்பது சற்று கடினமாக இருக்கும். சீரான இடைவெளியில் பல்குத்தும் குச்சிகளை வைத்தபிறகு வேகமாக காய்ந்துவிடும் பசையைக் கொண்டு ஒட்டவும். காயும்வரை இரண்டு நிமிடங்கள் காத்திருக்கவும். விருப்பரீதியானது: வெவ்வேறு எண்ணிக்கையில் பல்குத்தும் குச்சிகளை வைத்து பல ரம்பங்களை உருவாக்கவும். இதனால் விளையாடுபவர்கள் பல கடினமான நிலைகளில் விளையாடலாம்.



3. ஒவ்வொரு பல்குத்தும் குச்சியின் நடுவிலும் சிறிதளவு பசையைச் சேர்க்கவும், பிறகு இரண்டாவது ஐஸ்குச்சியை அந்த பல்குத்தும் குச்சியின் மீது ஒட்டவும். பல்குத்தும் குச்சிகளை ஐஸ் குச்சிகளுக்கு நடுவே அழுத்தி இரண்டு பக்கமும் நன்றாக ஒட்டிக்கொள்ளும் வகையில் வைத்து வேளாமீனின் அலகைத் தயார் செய்யவும். இந்த ரம்பத்தைத் தனியாக வைத்து காயவைக்கவும்.






SAWFISH CONSERVATION SOCIETY

save our seas foundation

4. நீர் வைத்துள்ள கொள்கலனில் வலையைத் தயார் செயய, தேவையான நீளத்தில் நூல் இழைகளைக் கொள்கலன் <u>நீளத்தில்</u> குறுக்காகத் இழுத்து கட்டிவிடவும். கொள்கலனின் வகையைப் பொறுத்து அவற்றைப் பசை கொண்டு ஒட்டலாம் அல்லது கொள்கலனில் சிறுதுளைகளை அமைத்து இந்த நூல் இழைகளைப் பிணைக்கலாம்.




5. தேவையான நீளத்தில் மற்றொரு நூல் இழையை வெட்டி கொள்கலனின் <u>அகலத்தில்</u> குறுக்காக அமைத்து சீரான இடைவெளிகளில் மீன் வலையை உருவாக்கவும். இந்த நூல் இழைகளின் இடைவெளி முக்கியம்; சதுரங்கள் மிகவும் அதிகமாக இருந்தால் இரையைப் பிடிப்பது மிக எளிது!



6. “மீன்வலையைத்” தயார் செய்த பிறகு, கொள்கலனில் இரண்டு மீன் பொம்மைகளை வைக்கவும்.



7. ரம்பம் முழுவதுமாக காய்ந்த பிறகு, இரண்டு ரப்பர் பேண்டுகளைக் கொண்டு அதைச் சுற்றவும். இதனால் விளையாடுபவரின் விரல்களில் ரம்பம் சரியாக இருக்கும். ரப்பர் பேண்டுகளை இரண்டு முறை சுற்றி வைக்க வேண்டியிருக்கலாம்.



**பாடம்:**

1. விளையாடுவதற்கு, ரப்பர் பேண்டுகளில் 2 விரல்களை வைத்து ரம்பத்தை அணியவும், பின்னர் வலையில் சிக்காமல் ஒரு பொம்மை மீனை கொள்கலனில் இருந்து அகற்ற முயற்சிக்கவும்.
   விருப்பரீதியானது: வெவ்வேறு எண்ணிக்கையிலான பல்குத்தும் குச்சிகள் மூலம் செய்த பல ரம்பங்களைக் கொடுத்து கடினமான அளவைத் தேர்வுசெய்ய விளையாடுபவரை அனுமதிக்கவும்.

2. கொள்கலனில் இருந்து வேளாமீனை வெளியே எடுக்க விளையாடுபவர் முயலும்போது, விளக்கவும்:
   - வேளாமீன் அடிக்கடி வலையில் மாட்டிக்கொள்ளும். இதை நாம் அரிதாகத்தான் பார்க்க முடியும்.
   - வலையில் மாட்டிக்கொள்ளும்போது தன் உடலை அசைத்து அதன் ரம்பத்தை சுழற்றும், இதனால் அது மேலும் நன்றாக மாட்டிக்கொள்ளும்.
   - மீனவர்கள் கூட வலையில் இருந்து அவற்றை வெளியே எடுக்க கஷ்டப்படுகிறார்கள். இதற்காக சிலசமயம் வேளாமீனைக் கொல்கிறார்கள் அல்லது அதன் ரம்பத்தை வெட்டுகிறார்கள். ஆனால் வேளாமீன் வேட்டையாடவும் தன்னைக் காத்துக்கொள்ளவும் அதற்கு ரம்பம் மிகவும் அவசியமாகும்.
   - தகுந்த விடுவிக்கும் செயல்முறைகளைப் பயன்படுத்தி வலையில் இருந்து வேளாமீனை மீனவர்கள் பாதுகாப்பாக வெளியே எடுக்கலாம் (உ+ம் : வலையை அறுப்பது).

3. விளையாடுபவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதைக் கேட்கவும். வலையில் இருந்து அதை வெளியே எடுப்பது எளிதானதா அல்லது கடினமானதா? வலையில் இருந்து வேளாமீனை வெளியே எப்படி எடுப்பார்கள்?





SAWFISH CONSERVATION SOCIETY
save our seas foundation